RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-25 | 25 ஜனவரி | சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## சஞ்சய் ராய்க்கு மரண தண்டனை கோரி கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் சிபிஐ மேல்முறையீடு

கொல்கத்தா, ஜன.25

ஆர்.ஜி.கர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை பாலியல் வன்கொடுமை வழக்கு குற்றவாளி சஞ்சய் ராய்க்கு மரண தண்டனை விதிக்கக் கோரி, கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் சிபிஐ மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்துள்ளது.

இந்த பாலியல் வன்கொடுமை வழக்கில் சஞ்சய் ராய்க்கு விசாரணை நீதிமன்றம் வழங்கிய தண்டனை போதுமானதாக இல்லை என்று கூறி மத்திய புலனாய்வு அமைப்பு (சிபிஐ), உயர் நீதிமன்ற நீதிபதிகள், டெபாங்ஷூ பசாக் மற்றும் எம்டி ஷப்பர் ரஷிதி அடங்கிய அமர்வு முன்பு மேல் முறையீட்டு மனுவினைத் தாக்கல் செய்தது.

இதற்கு பதில் அளித்த நீதிமன்ற அமர்வு, "இதே கோரிக்கையுடன் மாநில அரசும் மனு ஒன்றினைத் தக்கல் செய்துள்ளது, அதனுடன் சேர்த்து சிபிஐயின் மேல்முறையீட்டு மனுவும் வரும் ஜன.27ம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்" என்று தெரிவித்தது.

முன்னதாக, மேற்குவங்க



தலைநகர் கொல்கத்தாவில் ஆர்.ஜி.கர் அரசு மருத்துவமனையில் இரவு பணியில் இருந்த பெண் மருத்துவர் (31) கடந்த ஆகஸ்ட் 9ம் தேதி சடலமாக மீட்கப்பட்டார். அவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, கொடூரமாக கொலை செய்யப்பட்டது பிரேத பரிசோதனையில் தெரியவந்தது. இந்த கொடூர கொலை தொடர்பாக, காவல் துறையில் தன்னார்வலராக பணியாற்றிய சஞ்சய் ராய் கடந்த ஆகஸ்ட் 10ம் தேதி கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு மீதான விசாரணை கொல்கத்தாவில் உள்ள விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வழக்கில் 81 சாட்சிகள் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 50 பேரிடம் நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்பட்டது. கடந்த அக்டோபர் 7ம் தேதி சிபிஐ தரப்பில் விசாரணை நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. பெண் மருத்துவர் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டிருப்பதாக மருத்துவ மாணவர்கள் குற்றம் சாட்டினர். ஆனால் சிபிஐ குற்றப்பத்திரிகையில் சஞ்சய் ராய் மட்டுமே குற்றத்தில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 9ம் தேதி அனைத்து தரப்பு விசாரணைகளும் நிறைவடைந்து தேதி குறிப்பிடப்படாமல் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. இந்த வழக்கில் நீதிபதி அனிபர் தாஸ் கடந்த 18ம் தேதி தீர்ப்பினை வழங்கினார். அப்போது, சிபிஐ முன்வைத்த ஆதாரங்களின் அடிப்படையில் சஞ்சய் ராய் குற்றவாளி என்று நீதிபதி தீர்ப்பளித்தார். தண்டனை விவரம் ஜன. 20ம் அறிவிக்கப்பட்டது.

ஜனவரி 20 அன்று, "குற்றவாளி சஞ்சய் ராய்க்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது. இதன்மூலம் அவர் தனது வாழ்வின் கடைசி நாள் வரை சிறையில் இருப்பார். மேலும் அவருக்கு ரூ. 50 ஆயிரம் அபராதம் விதிக்கப்படுகிறது." என்று தீர்பளித்திருந்தார்.

## வேங்கைவயல் சம்பவத்தில் 3 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்: ஐகோர்ட்டில் அரசு தகவல்

சென்னை, ஜன.25

வேங்கைவயல் குடிநீர் தொட்டியில் மனிதக்கழிவு கலந்த விவகாரம் தொடர்பான விசாரணையை முடித்து 3 பேருக்கு எதிராக சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் குடிநீர் தொட்டியில் மனிதக் கழிவு கலந்த விவகாரம் தொடர்பாக சிபிஐ விசாரணை கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. கடந்த 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த இந்த சம்பவம் தொடர்பாக சிபிசிஐடி போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவம் குறித்து விசாரிக்க உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி எம்.சத்தியநாராயணன் தலைமையில் ஒரு நபர் ஆணையத்தை அமைத்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.



இந்நிலையில், நீண்ட நாட்களுக்கு பின் இந்த வழக்கு தலைமை நீதிபதி ஸ்ரீராம் மற்றும் நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி அமர்வில் இன்று (ஜன.24) விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் தரப்பில், "சம்பவம் நடந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் இதுவரை குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை" என தெரிவிக்கப்பட்டது. இதை மறுத்த தமிழக அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன், "வழக்கின் விசாரணை முடிவடைந்து முரளிராஜா, சுதர்சன் மற்றும் முத்துகிருஷ்ணன் ஆகியோருக்கு எதிராக ஜனவரி 20ம் தேதி புதுக்கோட்டை சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது." என்றுகூறி அறிக்கை தாக்கல் செய்தார்.

அதில், "சிபிசிஐடி போலீஸார் நடத்திய விசாரணையில், வேங்கைவயல், இறையூர் கிராமங்கள் அடங்கிய முடுக்காடு பஞ்சாயத்து தலைவராக உள்ள பத்மா முத்தையா, குடிநீர் தொட்டி ஆபரேட்டர் சண்முகத்தை பணி நீக்கம் செய்ததால், பஞ்சாயத்து தலைவரின் கணவரை பழி வாங்கும் வகையில், குடி நீரில் நாற்றம் வருவதாக முரளி ராஜா என்பவர் பொய் தகவலை பரப்பியதாகவும், அதன்பின் குடிநீர் தொட்டி மீது ஏறிய முத்துகிருஷ்ணன் மற்றும் சுதர்சன் ஆகியோர் இத்தகைய குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளனர்." என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து இந்த அறிக்கையை மனுவாக தாக்கல் செய்ய அரசு தரப்புக்கு உத்தரவிட்டு வழக்கின் விசாரணையை பிற்பகல் 2.15 மணிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

## டங்ஸ்டன் சுரங்க ஒப்பந்த ரத்துக்கும் தமிழக அரசுக்கும் சம்பந்தம் இல்லையாம்! திண்டுக்கல் சீனிவாசன் சொல்கிறார்

சிவகங்கை, ஜன.25

டங்ஸ்டன் சுரங்க ஒப்பந்த ரத்துக்கும் தமிழக அரசுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என அதிமுக முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் தெரிவித்தார்.

சிவகங்கையில் அதிமுக சார்பில் எம்ஜிஆர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நேற்றிரவு நடைபெற்றது. செந்தில்நாதன் எம்எல்ஏ, முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், ஜி.பாஸ்கரன் உள்ளிட்டோர் பேசினர்.

கூட்டத்துக்கு பின் திண்டுக்கல் சீனிவாசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: டங்ஸ்டன் சுரங்க ஒப்பந்தம் ரத்து தங்களால் நடந்ததாக திமுக கூறுகிறது. திமுக வழக்கம்போல் சொல்லும் பொய்களில் இதுவும் ஒன்று. தமிழக அரசுக்கும், டங்ஸ்டன் சுரங்க ஒப்பந்த ரத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.



டங்க்ஸ்டன் சுரங்க விவகாரத்தை திமுக அரசு 4 ஆண்டுகளாக கண்டுகொள்ளவில்லை. அதிமுக கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தது. மேலும் பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததாலும் மத்திய அரசு ரத்து செய்தது. பரந்தூர் விமான நிலையத்தில் மக்களுக்கு புரிதல் இல்லை என ஹெச். ராஜா சொல்லியது உண்மை தான். எங்கள் ஆட்சியின்போதும் ஒரு சில திட்டங்களுக்கு மக்கள் புரிதல் இல்லாததாலேயே எதிர்ப்பு தெரிவித்தனர்.

விஜய் பரந்தூர் விமான நிலைய போராட்டக்காரர்களை சந்தித்தது குறித்து பேச வேண்டியது எதுவும் இல்லை. அவர் கட்சி, அவர் செயல்படுகிறார்.


கடந்த 10 ஆண்டுகால அதிமுக ஆட்சியிலும், திமுக ஆட்சியிலும் கடனை ஒப்பிட்டு பாருங்கள். யார் தமிழகத்தை அதல பாதாளத்துக்கு தள்ளியது எனத் தெரியும். தமிழகத்தில் ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் ரூ.3 லட்சம் கடன் சுமை உள்ளது. அதுதான் இந்த ஆட்சியின் லட்சணம். சபாநாயகர் அப்பாவு மற்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் ஆளுநரை மனிதராகவே மதிப்பது இல்லை. அதிமுகவை பொருத்தவரை ஆளுநரை சட்டத்தின்படி மதிக்கிறோம். அவரின் செயல்பாடுகள் சட்டத்துக்குட்பட்டு இருந்தால் ஆதரிக்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ட்ரம்ப்பின் 'பிறப்புக் குடியுரிமை ரத்து' உத்தரவுக்கு இடைக்கால தடை: யுஎஸ் நீதிமன்றம் அதிரடி

வாஷிங்டன், ஜன.25

அமெரிக்க குடியுரிமை பெறாத பெற்றோருக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த பிறப்பின் அடிப்படையிலான குடியுரிமையை ரத்து செய்யும் அதிபர் டொனால்டு ட்ரம்ப்பின் உத்தரவுக்கு அமெரிக்க ஃபெடரல் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

முன்னதாக, கடந்த 20ஆம் தேதி அமெரிக்க அதிபராக திங்கள்கிழமை பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், உடனடியாக பல்வேறு முக்கிய உத்தரவுகளைப் பிறப்பித்தார். அதில், "பிறப்புரிமை அடிப்படையிலான அமெரிக்க குடியுரிமை ரத்து செய்யப்படுகிறது. அமெரிக்காவில் பிறக்கும் குழந்தையின் பெற்றோரில் யாரேனும் ஒருவர் நிரந்தர அமெரிக்க குடியுரிமை பெற்றிருந்தால் மட்டுமே அந்தக் குழந்தைக்கு அமெரிக்க குடியுரிமை வழங்கப்படும். இந்த உத்தரவு 30 நாட்களில் நடைமுறைக்கு வரும். அமெரிக்க குடிமக்கள் அல்லாதவர்களின் குழந்தைகள் அமெரிக்காவின் 'அதிகார வரம்பிற்கு உட்பட்டவர்கள்' அல்ல என்பதால், குடியுரிமை சட்டத்தின் 14வது திருத்தத்தில் வழங்கப்பட்ட அரசியலமைப்பு உத்தரவாதம் அவர்களுக்கு பொருந்தாது" என்று பிறப்பித்த உத்தரவு அதிர்வலைகளை ஏற்படுத்தியது.



'அரசியல் சாசனத்துக்கு விரோதமானது..' இதனை எதிர்த்து அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் வழக்கு தொடரப்பட்டது. இந்நிலையில் சியாட்டல் மாகாண நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி ஜான் கோக்னார், "ட்ரம்ப்பின் உத்தரவு அரசியல் சாசனத்துக்கு விரோதமானது." எனக்கூறி அந்த உத்தரவுக்கு தற்காலிக தடை விதித்தார். இதன் மூலம் ட்ரம்ப் உத்தரவு அமலாவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த உத்தரவை எதிர்த்து மேல் முறையீடு செய்யப்போவதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஓவல் அலுவலகத்தில் ட்ரம்ப்பிடம் தடை உத்தரவு குறித்து தெரிவிக்கப்பட்டபோது, 'நிச்சயம் மேல்முறையீடு செய்வோம்.' என்று அவர் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியர்களுக்கு பாதிப்பு: இந்தியாவைச் சேர்ந்த லட்சக்கணக்கானோர் ஹெச்1பி (பி1பி) விசா மூலம் அமெரிக்கா சென்று அங்கு பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்களில் பணியாற்றி வரும் நிலையில் ட்ரம்ப்பின் இந்த உத்தரவு அவர்களுக்கு மிகப் பெரிய கவலையை அளித்துள்ளது. வேலை விசாக்கள் அல்லது சுற்றுலா விசாக்கள் மூலம் அமெரிக்காவில் வசிக்கும் இந்திய குடிமக்களுக்கு பிறக்கும் குழந்தைகள் இனி இயல்பாக குடியுரிமை பெற மாட்டார்கள் என்பதால் அவர்கள் கவலை அடைந்துள்ளனர். அதோடு, தற்காலிக விசாக்கள் மூலம் பல்லாயிரக்கணக்கான இந்தியர்களை ஆண்டுதோறும் வேலைக்கு அமர்த்தும் அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் இது பாதிப்பை ஏற்படுத்தும் என கூறப்படுகிறது.

இது தொடர்பான விவாதம் அமெரிக்கா முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ள நிலையில், ட்ரம்ப்பின் இந்த உத்தரவுக்கு இந்திய அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

சிசேரியனுக்கு ஆர்வம் காட்டும் கர்ப்பிணிகள்.. இதற்கிடையில், பிறப்புரிமை அடிப்படையிலான அமெரிக்க குடியுரிமை ரத்து ஒரு மாத காலத்துக்குள் அமலுக்கு வரும் என்பதால், அதற்குள் குழந்தையை சிசேரியன் மூலமாவது பெற்றுக் கொள்ள நிறைமாத கர்ப்பிணிகள் பலர் ஆர்வம் காட்டுவதாக தகவல்கள் வெளியாகின்றன. இருப்பினும் அமெரிக்காவில் சிசேரியன் அறுவை அவ்வளவு எளிதாக நடைபெறுவதில்லை என்பதால் அதனை சட்டபூர்வமாக எப்படி செய்து கொள்வது என்றும் கர்ப்பிணிகள் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.


## ரூ.1 லட்சம் மின் கட்டணம் செலுத்துமாறு விவசாயிக்கு தமிழக மின்வாரியம் நோட்டீஸ்

கொடைக்கானல், ஜன.25

கொடைக்கானல் அருகே கே.சி.பட்டியில் விவசாயியிடம் மின் கட்டணமாக ரூ.1 லட்சம் செலுத்து மாறு மின்வாரியம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. கொடைக்கானல் கீழ்மலைக் கிராமமான கே.சி.பட்டியில் விவசாயமே பிரதான தொழிலாகும்.

இங்குள்ள பெரும்பாலான வீடுகளுக்கு சிங்கிள் பேஸ் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் டிஜிட்டல் மின் மீட்டர் பொருத்தப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களாவே இப்பகுதியில் உள்ள வீடுகளில் குறைந்த அளவு மின்சாரம் பயன் படுத்தினாலும், மின் கட்டணம் ஆயிரக் கணக்கில் வருவதாக பொது மக்கள் குற்றம் சாட்டி வந்தனர்.

இந்நிலையில், இப்பகுதியைச் சேர்ந்த விவசாயி இளையராஜா



என்பவருக்கு 8,976 யூனிட் மின்சாரம் பயன்படுத்தியதற்காக ரூ.1 லட்சத்து ஆயிரத்து 333 மின் கட்டணமாக செலுத்த வேண்டும் என மின் வாரியம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் மின் கட்டணம் அதிகமாக இருப்பதாக மின்வாரிய அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார். ஆனால், நோட்டீசில் உள்ள படி மின் கட்டணத்தை செலுத்தாவிட்டால் மின் இணைப்பு துண்டிக்கப்படும் என்று மின் வாரிய துறையினர் எச்சரித்துள்ளதால் அவர் கவலை அடைந்துள்ளார்.

இதுகுறித்து கே.சி.பட்டி கிராம மக்கள் கூறியதாவது: கடந்த சில மாதங்களாக வீடுகளுக்கு பயன்படுத்தும் மின் கட்டணம் ஆயிரக்கணக்கில் வருகிறது. இந்த குளறுபடிக்கு புதிய டிஜிட்டல் மின் மீட்டர் காரணமா? என தெரியவில்லை. மின் கட்டணம் குறித்து பல முறை புகார் அளித்தும் மின்வாரியத் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது விவசாயி இளையராஜாவுக்கு ரூ.1 லட்சம் மின் கட்டணம் வந்துள்ளது.

அவரைப்போல, பலருக்கும் ரூ.7 ஆயிரம், ரூ.8 ஆயிரம் மின் கட்டணம் செலுத்துமாறு நோட்டீஸ் வந்துள்ளது. அந்த கட்டணத்தை செலுத்தாவிட்டால் மின் இணைப்பு துண்டிக்கப்படும் என்று மிரட்டுகின்றனர். மாவட்ட நிர்வாகம் தலையிட்டு இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று கூறினர்.

## "பெரியாரை தூற்றுவோரை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்" மாற்றுக்கட்சியினர் திமுகவில் இணையும் விழாவில் உதயநிதி பேச்சு

சென்னை, ஜன.25

சென்னை அண்ணா அறிவாலயத்தில் மாற்றுக்கட்சி இளைஞர்கள் திமுகவில் இணையும் விழா இன்று (ஜன.24) நடைபெற்றது. இதில் நாதக நிர்வாகிகள் 51 பேர் உள்பட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.

இந்த நிகழ்வில் திமுக இளைஞரணி செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: "மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த 3000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் உள்ளிட்டோர் திமுகவில் இணைந்துள்ளனர். இன்னும் 13 14 மாதங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் வரப்போகிறது. பொதுவாக தேர்தல் வரும் நேரங்களில் ஆளுங்கட்சியை எதிர்த்து எதிரணிகள் தான் ஒன்று சேர்வார்கள். அதுதான் வழக்கம். ஆனால், வித்தியாசமாக எதிர்க்கட்சியில் இருந்த நீங்கள், உங்கள் அனைவரையும் ஆளுங்கட்சியில் இணைத்துக் கொண்டுள்ளீர்கள். இதன்மூலம் வரும் சட்டப்பேரவைத் தேர்தலின் முடிவு என்ன என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது.



இன்று கட்சியில் இணைந்துள்ள நீங்கள், வெறும் சட்டப்பேரவைத் தேர்தலின் முடிவை மட்டும் கருத்தில் கொண்டு திமுகவில் இணையவில்லை, கட்சியின் கொள்கை மற்றும் லட்சியங்களையும், தமிழக முதல்வரின் தலைமையையும் ஏற்று இணைந்துள்ளீர்கள். இதுபோல நீங்கள் திமுகவில் இணையும்போது, கண்டிப்பாக எதிர்க்கட்சிகளுக்கு வயிற்றெரிச்சல் வரத்தான் செய்யும். அதற்காகவே, என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்துக்கு மத்திய அரசு சார்பில் ஒருவரை அனுப்பி வைத்துள்ளனர். அவர்தான் தமிழக ஆளுநர். அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்ல, நியமிக்கப்பட்ட ஒருவர். அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? தமிழகத்தின் அடையாளங்களை ஒவ்வொன்றாக அழிக்கின்ற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். திருவள்ளுவருக்கு காவி சாயம் பூசுவது, தமிழ்த்தாய் வாழ்த்தை கொச்சைப்படுத்துவது, தமிழ்த்தாய் வாழ்த்து பாடக்கூடாது என்று சட்டப்பேரவையிலேயே கூறுவது, சட்டப்பேரவையை புறக்கணித்துச் செல்வது, இதுதான் ஆளுநரின் வேலை.

இதையெல்லாம் தட்டிக் கேட்க வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சித் தலைவருக்கு உண்டு. ஆனால், அவ்வாறு செய்வதில்லை. டங்ஸ்டன் சுரங்க ஏலம் தொடர்பான விவகாரம் வந்தபோது, சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து முதல்வர் மக்களை நேரடியாக சென்று சந்திக்குமாறு கூறினார். மேலும் சட்டசபையில், திமுக ஆட்சி இருக்கும்வரை மதுரையில் டங்ஸ்டன் திட்டம் நிறைவேற்றப்படாது என்று கூறினார். அதை செய்தும் காட்டி மக்களோடு நின்று மக்களுக்கான ஆட்சியை கொடுத்து கொண்டிருக்கிறார். மக்களுக்கான பல்வேறு திட்டங்களை முதல்வர் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

இனிமேல் பெரியார் பற்றி எல்லாம் எங்களுக்கு கவலை இல்லை. பெரியாரை தூற்றுவோரை எல்லாம் நீங்கள் பார்த்துக் கொள்வீர்கள். அதற்கு இனிமேல் நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்வீர்கள், வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் 200 தொகுதிகளில் வெல்வோம் என்று இலக்கு நிர்ணயித்துள்ளார். இன்று கட்சியில் இணைந்துள்ளவர்களின் எழுச்சியைக் காணும்போது 200 அல்ல 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் திமுக வெல்லும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது." என்று அவர் பேசினார்.

## புதுக்கோட்டை கீரனூரில் தேசிய சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி

கீரனூர் ஜன.25

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூரில்தேசிய சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. புதுக்கோட்டை மாவட்டம் கீரனூரில் நெடுஞ்சாலைத்துறை உட்கோட்டத்தின் சார்பாக தேசிய சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது இப்பேரணியை நெடுஞ்சாலை துறையின் கோட்ட பொறியாளர் தமிழ் அழகன் உதவிகோட்ட பொறியாளர் சரவணன் உதவி பொறியாளர் இலக்கியா கீரனூர் காவல் ஆய்வாளர் துணை ஆய்வாளர்கள் கொடியசைத்து இப்பேரணியை துவங்கி வைத்தனர் சாலை விழிப்புணர்வு பாதுகாப்பு குறித்து இந்த பேரணியில் கோஷங்கள் எழுப்பியவாறு கீரனூர் முக்கிய வீதிகள் வழியாக சென்றனர் இப்பேரணியில் சாலை ஆய்வாளர்கள் சாலை பணியாளர்கள் அலுவலக ஊழியர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.






மதுரையில் நடைபெற்ற சர்வதேச அளவிலான சிலம்பப் போட்டியில் ராமநாதபுரம் மாவட்டம் சத்திரக்குடியில் செயல்பட்டு வரும் கலை ஸ்போர்ட்ஸ் அகடாமி சார்பில் மாணவர்கள் பங்கேற்று முதல் மூன்று இடங்களை பிடித்து சாதனை செய்துள்ளனர் இதனை அடுத்து கலை ஸ்போர்ட்ஸ் அகடாமியின் நிறுவனரும் சிலம்ப ஆசிரியருமான கலைக்குமார் மாணவர்களை வாழ்த்தி பாராட்டினார் மேலும் பல்வேறு பகுதியில் இருந்து மாணவர்களுக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகிறது.




சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டப்பேரவை பொது கணக்கு குழு ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத் தலைமையில் இன்று நடைபெற்றது. கடந்த இரு தினங்களுக்கு முன்பு தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையில் வளர்ச்சி பணிகளை தொடங்கி வைத்தார். அதன் நிலை குறித்து விவாதிக்கப்பட்டது.இக்கூட்டத்தில் சட்டமன்ற பேரவை பொது குழு தலைவர் செல்வப் பெருந்தகை,அரசு இணை இயக்குனர் ரேவதி, சட்டமன்ற உறுப்பினர்கள் எழிலரசன், ஆளூர் ஷாநவாஸ், தமிழரசி ரவிக்குமார், மாங்குடி, கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வ சுரபி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்..




சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம் தொடங்கி 10 வருடங்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மாவட்ட மகளிர் அதிகார மைய பணியாளர் நித்யா மற்றும் பவானீஸ்வரி ஆகியோர் பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.காவலர் பூபதி pocso குறித்தும் மானாமதுரை போக்குவரத்து காவல் ஆய்வாளர் மகிமை தாஸ் பெண்கள் பாதுகாப்பு குறித்தும் ஒருங்கிணைந்த சேவை மையப் பணியாளர் சந்தியா பெண்கள் உதவி எண் குறித்து விழிப்புணர்வு வழங்கப்பட்டது மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலக பணியாளர்கள் சத்திய மூர்த்தி ஜோதி, ராமர் குழந்தைகளுக்கான உதவி எண்கள் குறித்தும் குழந்தை திருமண தடுப்பு சட்டம் குறித்தும் விழிப்புணர்வு வழங்கினார் இதில் பொதுமக்கள் மற்றும் சமூக நலத்துறை பணியாளர்கள் கலந்து கொண்டனர்..



வேலூர் மாவட்டம், செருவங்கி நகராட்சியில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ் செருவங்கி நகராட்சி தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவினை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன், குடியாத்தம் நகரமன்ற தலைவர் சௌந்தரராஜன், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, நகராட்சி ஆணையாளர் மங்கையர்கரசன், வட்டாட்சியர் மெர்லின் ஜோதிகா மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, குடியாத்தம் ராபின்சன் குளக்கரை பகுதியில், "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ் குடியாத்தம் ராபின்சன் குளக்கரை பகுதியில் அமைந்துள்ள உழவர் சந்தையில் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர், குடியாத்தம் நகரமன்ற தலைவர் சௌந்தரராஜன், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, நகராட்சி ஆணையாளர் மங்கையர்கரசன், வட்டாட்சியர் மெர்லின் ஜோதிகா, அரசு துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# திருப்பரங்குன்றம் விவகாரம் : ராமநாதபுரம் எம்பி நவாஸ் கனி பதவி விலக அண்ணாமலை வலியுறுத்தல்

சென்னை, ஜன.25

திருப்பரங்குன்றம் முருகன் கோயிலை அசுத்தப்படுத்திய ராமநாதபுரம் எம்பி நவாஸ் கனி, உடனடியாக பதவி விலக வேண்டும் என்றும், பொதுமக்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும் என்றும் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "இரண்டு நாட்களுக்கு முன்பாக, திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயில் மலைக்கு, தனது ஆதரவாளர்களுடன் சென்ற, ராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, இந்துமக்கள் புனித



மாகக் கருதும் திருப்பரங்குன்றம் மலையில் அமர்ந்து, அவருடன் வந்தவர்கள் அசைவ உணவு உண்ணும் புகைப்படத்தை, அவரது சமூக வலைத்தளப் பக்கத்திலேயே பகிர்ந்திருந்தார். பொதுமக்கள் மற்றும் பாஜக சகோதர சகோதரிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தவுடன், தற்போது அசைவ உணவு உண்டதை நிரூபித்தால், தனது பதவியை ராஜினாமா செய்யத் தயார் என்கிறார்.

அப்படிக் கூறும் காணொளியிலேயே இறுதியாக, தனது ஆதரவாளர்கள், திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயில் மலையில், அசைவ உணவு உண்டதையும் ஒப்புக்கொள்கிறார்.

நாட்டின் இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் கட்டுப்படுவேன் என்ற உறுதி மொழியை ஏற்று, நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற நவாஸ் கனி, அதனை முழுமையாக மீறியிருக்கிறார். மேலும், திருக்கோயில் மலையில் அசைவ உணவு உட்கொண்டதை, அவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டதன் ஒரே நோக்கம், இந்து சமய மக்களைப் புண்படுத்துவது மட்டுமே.

தான் கூறியதைப் போல, கோயில் மலையில் அசைவ உணவு உண்டதை நிரூபித்தால் பதவி விலகத் தயார் என்று கூறியிருக்கும் நவாஸ் கனி, அவரது வாயாலேயே உண்மையை ஒப்புக்கொண்டதால், உடனடியாக அவர் பதவி விலகுவதோடு, தமிழ் மக்களின் மனம் புண்படும்படி, முருகப்பெருமான் திருக்கோயிலை அசுத்தப்படுத்தியதற்கு, பொதுமக்களிடம் மன்னிப்பும் கேட்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெருங்களத்தூர் வடக்கு- தெற்கு தாம்பரம் மேற்கு பகுதி தி.மு.க சார்பில் செயல்வீரர் கூட்டம்

பெருங்களத்தூர் ஜன25

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பெருங்களத்தூர் தெற்கு தாம்பரம் மேற்கு பகுதி தி.மு.க சார்பில் பகுதி கழக செயலாளர்கள் அண்ணன் எஸ்.சேகர், டி.காமராஜ், எஸ.இந்திரன் அகியோர் தலைமையில், நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பல்லாவரத்தில் 25/01/2025 அன்று திமுக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் பங்கேற்கும் வீர வணக்கநாள் பொதுக் கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடுகள் செய்வது குறித்து, காஞ்சி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு




ஆலோசனைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.சங்கர், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர அணிகளின் நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், மாநகர பிரதிநிதிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இறுதி யில் மாமன்ற உறுப்பினர் பி.புகழேந்தி நன்றி உரையாற்றினார்.

# நேதாஜியின் 128வது பிறந்த நாளை முன்னிட்டு சாலை பாதுகாப்பு - போதை விழிப்புணர்வு பேரணி

செங்கல்பட்டு ஜன25

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியம், மேடவாக்கம் ஊராட்சியில் கண்ணபிரான் மண்டபம் அருகில் உள்ள நேதாஜி வித்யாலயா பள்ளி சார்பில் நேதாஜியின் 128 வது பிறந்த நாளை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி பள்ளி தாளாளர் எம்.பி.கண்ணபிரான் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து பள்ளிக்கரணை போக்குவரத்து காவல் ஆய்வாளர் பாண்டியன் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

பள்ளியிலிருந்து 130 குழந்தைகள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர் கள் சாலை பாதுகாப்பு மற்றும் போதைப் பொருள்



தடுப்பு பேரணி பேனர்களை கையில் ஏந்தி விழிப்புணர்வு பிரச்சாரம் செய்து கொண்டு மாம்பாக்கம் சாலை வழியாக பள்ளிக்கரணை காவல் நிலையம் சென்ற போது காவல் ஆய்வாளர் நெடுமாறன் அனைவரையும் வரவேற்று விழிப்புணர்வு பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். பள்ளிக் குழந்தைகளுக்கு காவல் நிலையத்தில் குற்றங்கள் பற்றிய மற்றும் துப்பாக்கி, புகை குண்டுகள் எப்படி இயங்குகின்றன மக்களை பாதுகாக்க உதவுகின்றன என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தினர். காவல் ஆய்வாளர் நெடுமாறன் குழந்தைகள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி வாழ்த்தினார். இந்தப் பேரணியை பொதுமக்கள் அனைவரும் உற்று நோக்கியது குறிப்பிடத்தக்கது.

# தாம்பரம் மாநகர பம்மல் வடக்கு மற்றும் பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் செயல்வீரர்கள் கூட்டம்

பம்மல் ஜன25

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பம்மல் வடக்கு பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் பம்மல் எஸ்.எஸ்.மஹால் திருமண மண்டபத்தில் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத் தலைவர் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் பம்மல் வே.கருணாநிதி அவர்கள் தலைமையில் பம்மல் வடக்கு பகுதி கழக செயலாளர் திருநீர்மலை த.ஜெயகுமார் அவர்கள் வரவேற்புரையில் பகுதி கழக நிர்வாகிகள் முன்னிலையில் மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவங்கள் துறை அமைச்சர் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா. மோ.அன்பரசன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மாநகர கழக செயலாளர் எஸ். ஆர்.ராஜா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் தாம்பரம் மாநகராட்சி மேயர் தாம்பரம் மாநகர கழக துணை செயலாளர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் தாம்பரம் மாநகர கழக அவைத் தலைவர் கோ.காமராஜ்,




பல்லாவரம் தொகுதி பார்வையாளர் திருமதி.ரத்னா லோகேஸ்வரன், தாம்பரம் மாநகராட்சி பொது சுகாதார குழுத் தலைவர் தாம்பரம் மாநகர துணை செயலாளர் இரா.நரேஷ் கண்ணா, காஞ்சி வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எல்.பிரபு, காஞ்சி வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன், தாம்பரம் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பிகேஏ.சத்தியபிரபு, வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இறுதியில் அனகை மாணவரணி அமைப்பாளர் ஏ.செந்தில் குமார், பம்மல் மாணவரணி அமைப்பாளர் எஸ். வெங்கடேசன் மற்றும் திருநீர்மலை இளைஞரணி அமைப்பாளர் எம்.சுரேஷ் குமார் ஆகியோர் நன்றியுரையாற்றினார்.

# தென்காசி மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் தமிழ் ஆட்சி மொழி சட்டவாரம் விழிப்புணர்வு பேரணி

தென்காசி, ஜன.25

தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் தமிழ் ஆட்சி மொழி சட்ட வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது அதனடிப்படையில், தென்காசி மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் 2024 2025 ஆம் ஆண்டுக்கான தமிழ் ஆட்சி மொழி சட்டவாரம் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், கொடியசைத்து துவக்கி வைத்தார்.



இப்பேரணியானது தென்காசி இ.சி.ஈஸ்வரன்பிள்ளை அரசு ஆண்கள் ஆண்கள் மேல்நிலை பள்ளியிலிருந்து புதிய பேருந்து நிலையம் வழியாக சென்று சாலை வழியாக மீண்டும் இ.சி.இ ஆண்கள் அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளிக்கு வந்தடைந்தது.

இப்பேரணியில், கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள் திருநெல்வேலி மண்டில தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர், திருவ.சுந்தர், கண்காணிப்பாளர், ஷீலா ஜெபரூபி, தமிழ் அறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கையில் சட்டமன்ற பொதுக்கணக்கு குழுத்தலைவர் செல்வப் பெருந்தகை ஆய்வு

சிவகங்கை ஜன 25.

சிவகங்கை மாவட்டம் சிவகங்கையில் தமிழ்நாடு சட்டமன்ற பொது கணக்கு குழு தலைவர் சட்டமன்ற உறுப்பினர் செல்வப் பெருந்தகை ஆய்வு மேற்கொண்டார்

ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் மற்றும் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் உடன் இருந்தனர்



பின்னர் பத்திரிகையாளர்களை சந்தித்த செல்வப்பெருந்தகை சிவகங்கை மாவட்டத்தில் நிர்வாக ரீதியாக பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நன்றி தெரிவித்தார்

குடிசை மாற்று வாரியம் சார்பாக நடைபெற்ற கட்டிடப் பணிகளை ஆய்வு செய்தவர் ஒரு சில குறைபாடுகளை ஆய்வு மேற்கொண்டு அதற்கான விளக்கம் கடிதம் கேட்டுள்ளும் அதற்கான விளக்க கடிதம் சென்னையில் தலைமை அலுவலகத்திலிருந்து விளக்க கடிதம் அளிப்பதாக கூறியிருக்கிறார்கள் என கூறினார்.

பின்னர் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் தன்னுடைய தாயார் பெயரில் லட்சுமி வளர்த்தமிழ் நூலகத்தை பிரமாண்டமாக கட்டி அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு வழங்கியதற்கு நன்றி தெரிவித்தார்

மேலும் கொடை உள்ளம் கொண்டவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு அதிக அளவில் இதுபோன்று கட்டிடங்களை கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டதுடன்

திருக்கோஷ்டியூர் மருத்துவமனை தரம் உயர்த்த வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளதாகவும்

நெடுஞ்சாலை துறை மற்றும் பள்ளி கல்வித்துறை தண்ணீர் தொட்டிகள் போன்ற வேலைகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதாகவும் சிவகங்கை மாவட்டம் கீழடியில் உலகமே வியந்து பார்க்கும் வகையில் கீழடியில் கிடைக்கப்பட்டுள்ள பொருட்கள் தமிழ்நாட்டில் இருக்கும் தமிழக மக்களுக்கு பெருமை சேர்த்துள்ளது என்றும் கூறினார் தமிழகத்தின் நிதி பற்றாக்குறை நிலவுவதாகவும் 2021 புதிய அரசாங்கம் ஆட்சி பொறுப்பு ஏற்கும்பொழுது நிதி இல்லாமல் ஆட்சி பொறுப்பு ஏற்றுமையால் தற்போதும் அதே நிதி பற்றாக்குறை தொடர்வதால் பல்வேறு வேலைகளில் தொய்வு ஏற்பட் டுள்ளது

இருந்தாலும் தமிழக முதல்வர் சிறப்பான முறையில் கையாண்டு நிதி பற்றாக்குறையை சமாளித்து வருகின்றார் எனவும் கூறினார்

ஆய்வின் போது மாவட்ட அனைத்துதுறை அதிகாரிகளும் கட்சி நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

# சென்னையில் கிக்ஸ் ஆண்ட் பஞ்சஜ் கராத்தே அகடாமி சார்பில் சர்வதேச கராத்தே போட்டிகள்




சென்னை ஜன25

சென்னையில் கிக்ஸ் ஆண்ட் பஞ்சஜ் கராத்தே அகடாமி சார்பில் சர்வதேச கராத்தே போட்டிகள் நடைபெற்றது.

மேற்கு தாம்பரத்தில் உள்ள கிக்ஸ் ஆண்ட் பஞ்சஜ் கராத்தே அகடாமி ஒவ்வொரு ஆண்டு கராத்தே வீரர்களின் திறமைகளை வெளி கொண்டு வரும் வகையில் சர்வதேச அளவிலான கராத்தே போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இந்தாண்டு சென்னை மயிலப்பூரில் கிக்ஸ் ஆண்ட் பஞ்சஸ் காரத்தே அகடாமி சார்பில் சர்வதேச 14வது ராயல் சேலன்சர்ஸ் ஒபன் கராத்தே சாம்பியன்ஷிப் போட்டியில் மலேசியா, ஸ்ரீலங்கா, பங்களாதேஷ் மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர, மாணவிகள் கலந்து கொண்டனர்.

கத்தா, குமுத்தே ஆகிய பிரிவுகளில் தனிதனியே போட்டிகள் நடத்தப்பட்டது. ஒவ்வொரு பிரிவுகளிலும் வீரர்கள் தங்களது தனி திறமையை வெளிப்படுத்தி போட்டியில் வெற்றி பெற்றனர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பைகள் மற்றும் சான்றிதழ்களை ரென்ஷி கார்த்திகேயேன் மற்றும் ரென்ஷி வனிதா மற்றும் சென்சாய் மிருதலா ஆகியோர் வழங்கினர்.

இது குறித்து கிக்ஸ் ஆண்ட் பஞ்சஜ் கராத்தே அகடாமி யின் நிறுவனர் ரென்ஷி கார்த்திகேயன் கூறுகையில், தமிழகத்தில் இண்டர்நேசனல் அளவில் மிகப்பெரிய கராத்தே போட்டிகளை நடத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இருந்து அதிகம் பணம் செலவழித்து வெளிநாட்டு வீரர்களுடன் அங்கு சென்று விளையாட முடியாது. எனவே வெளிநாட்டு வீரர்களை இங்கு அழைத்து வந்து நமது மாணவர்களுடன் மோதுவதில் பல திறமைகளை கற்று கொள்ளமுடியும். கராத்தே கலையை பள்ளிகள் தோறும் கற்று கொடுக்க நடவடிக்கைகள் தமிழக அரசு எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# தேனி மாவட்டம் நீலகிரி வரையாடுகள் குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை துவக்கி வைத்த ஆட்சியர்

தேனி, ஜன.25

தேனி மாவட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் வனத்துறை மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறையின் சார்பில் நீலகிரி வரையாடுகள் திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பிரச்சார வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி.ஷஜீவனா, தலைமையில் மாவட்ட வன அலுவலர் சமர்தா, இ.வ.ப., அவர்கள், திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் (நீலகிரி வரையாடு திட்டம்) கணேசன் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்கள்.




இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததாவது,

சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் தமிழகத்தின் மாநில விலங்கான வரையாட்டினை பாதுகாப்பதற்காக நீலகிரி வரையாடு திட்டத்தை (Project Nilgiri Tahr) தமிழ்நாடு முதலமைச்சர் 12.10.2023 அன்று தொடங்கி வைத்தார்கள். வரையாடு என்று மக்களால் பரவலாக அழைக்கப்படும் நீலகிரி வரையாடு" மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படுகிறது. இது புவிஈர்ப்பு விசைக்கெதிராக கடினமான குன்றின் மீது ஏறும் திறன்களுக்காக புகழ் பெற்றது. நீலகிரி வரையாடு தமிழ்நாட்டின் மாநில விலங்காக 2001 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.

வரையாடுகள் செங்குத்தான மலைகளிலும் அதிக உயரம் வரை செல்லக்கூடிய ஆற்றலை பெற்றுள்ளதால் நாமும் ஒரு செயலை செய்யும்போது மன உறுதியுடன் எதிர்வரும் தடைகளை தகர்த்தெறிந்து உயர்நிலையை அடைய வேண்டும் என்ற காரணத்திற்காகவும் வரையாடு நமது மாநில விலங்காக கருதப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

முன்னதாக, அல்லி நகரம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் நீலகிரி வரையாடுகள் அரும்புகள் அறக்கட்டளை குழுவினர்கள் மூலம் வரையாடுகள் குறித்து விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

தேனி மாவட்டத்தில் வரையாடுகள் குறித்த விழிப்புணர்வு வாகனம் இன்றுமுதல் (23.01.2025) அரசு மேல்நிலைப் பள்ளி லோயர்கேம்ப், என்.எஸ். கே.பி மேல்நிலைப்பள்ளி கூடலூர், ஸ்ரீ ஆதிசுஞ்சனகிரி பெண்கள் கல்லூரி கம்பம், நாராயணதேவன்பட்டி ஊராட்சி ஆகிய இடங்களிலும், நாளை (24.01.2025) அரசு மேல்நிலைப்பள்ளி எரசக்கநாயக்கனூர், அரசு மேல்நிலைப்பள்ளி ஹைவேவிஸ், அரசு தொடக்கப் பள்ளி கொட்டக்குடி, அரசு நடுநிலைப்பள்ளி கரட்டுப்பட்டி, மற்றும் குரங்கனி ஆகிய இடங்களிலும் 25.01.2025 அன்று அரசு மேல்நிலைப்பள்ளி முறுக்கோடை, அரசு மேல்நிலைப்பள்ளி குமணன்தொழு, அரசு மேல்நிலைப்பள்ளி லெட்சுமிபுரம், சோத்துப்பாறை ஊராட்சி, மஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி ஆகிய இடங்களுக்கு சென்று பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் இந்திராணி, அரும்புகள் அறக்கட்டளை (திருநெல்வேலி) நிறுவனர் மதிவாணன், வனத்துறை பசுமை தோழர் செல்வி பிரியங்கா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பள்ளி மாணவிகளுக்கு மஞ்சப்பைகள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்திய மதுரை மாநகராட்சி மேயர்

மதுரை, ஜன.25

மதுரை மாநகராட்சி மகபூப் பாளையம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் உட்கர்ஸ் குளோபல் பவுண்டேசன் சார்பில் மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வு நிகழ்வில் மேயர் இந்திராணி பொன்வசந்த் கலந்து கொண்டு மாணவிகளுக்கு மஞ்சப்பைகள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மீண்டும் மஞ்சப்பை திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அன்றாடம் வாழ்வில் பயன்படுத்தும் பொருட்களில் பாலிதீன் பைகள் பயன்பாடு அதிகரித்து வருகிறது. அவற்றை தவிர்க்கும் பொருட்டு மீண்டும் மஞ்சபைகள் பயன்படுத்துமாறு தமிழக அரசின் சார்பில் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் அனைவரும் பாலிதீன் பைக்கு மாற்றாக துணிப்பைகள், மஞ்சப்பைகள், சணல் நார்பைகள் பயன்படுத்தி சுற்றுச்சூழலை பாதுகாத்திட வேண்டும். பள்ளி மாணவ, மாணவிகள் பாலிதீன் பைகள் பயன்படுத்துவதை தவிர்ப்பதுடன் பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் சுற்றார்கள் அனைவருக்கும் மஞ்சப்பைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும் எனவும், பாலிதீன் பயன்பாட்டை தவிர்த்திடுவோம் வளமான தமிழகத்தை உருவாக்கிடுவோம் என மேயர் கூறினார்கள்.

இந்நிகழ்வில் துணை மேயர் தி.நாகராஜன், மண்டலத் தலைவர் பாண்டிச் செல்வி, மாமன்ற உறுப்பினர் மகாலெட்சுமி, மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், உட்கர்ஸ் குளோபல் பவுண்டேசன் மாநில அலுவலர் வசந்த ராஜா, முத்தூட் குழுமம் மேலாளர் ஜெயக்குமார், பள்ளி தலைமை ஆசிரியர் நான்சி, ஆசிரியர்கள், மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண் டனர்.

# தென்காசி மாவட்டத்தில் L&T நிறுவனம் சார்பில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் வேலைவாய்ப்பு முகாம்

தென்காசி, ஜன.25



L&T நிறுவனம் சார்பில் சென்னைக்கு அருகில் திருவள்ளுவர் மாவட்டம் காட்டுப்பள்ளியில் கப்பல் கட்டுமானப்பணி வேலைக்கு ஆள்சேர்க்கை நடைபெறுகிறது. எனவே, ஐடிஐ முடித்த பிட்டர், வெல்டர், எலக்ட்ரீசியன், வயர்மேன் பிரிவை சேர்ந்த மாணவர்கள், பாலிடெக்னிக் படித்த மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல் பிரிவை சேர்ந்த மாணவர்கள், மற்றும் பத்தாம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் தென்காசியில் 30.01.2025 அன்று காலை 10.00 முதல் மாலை 3.00மணி வரை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறுகிறது.

வேலையில் சேரும் நபர்களுக்கு முதல் முன்று மாதம் பயிற்சி காலத்திற்கு மாதம் ஊதியம் ரூ.15,000/ வழங்கப்படுகிறது. பயிற்சிக்கு பின் பத்தாம் வகுப்பு தகுதிக்கு ரூ.18,000/ மற்றும் ஐடிஐ/டிப்ளமோ தகுதிக்கு ரூ.21,000/ ஊதியமும் வழங்கப்படும். மேலும் விபரங்களுக்கு 04633298088, 7603942550 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம். எனவே, விருப்பமுள்ளவர்கள் இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.



வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் கீழ் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன், குடியாத்தம் நகரமன்ற தலைவர் சௌந்தரராஜன், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, நகராட்சி ஆணையாளர் மங்கையர்கரசன், வட்டாட்சியர் திருமதி மெர்லின் ஜோதிகா, அரசு துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# திண்டுக்கல் மாவட்டத்தில் இன்று பொது விநியோகத்திட்ட சிறப்பு குறைதீர் முகாம்

திண்டுக்கல், ஜன.25

பொது விநியோகத்திட்டத்தின் சேவைகளை அனைத்து தரப்பு மக்களுக்கும் வழங்குவதன் பொருட்டு திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலக வளாகங்களில் செயல்பட்டு வரும் தனி வட்டாட்சியர்(கு. பொ.) மற்றும் வட்ட வழங்கல் அலுவலகங்களில் 25.01.2025 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை பொது விநியோகத்திட்டம் தொடர்பாக சிறப்பு குறைதீர் முகாம் நடைபெறவுள்ளது.



இந்த முகாம்களில், குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், புதிய குடும்ப அட்டை, குடும்ப அட்டை நகல் தொடர்பாக கோரிக்கை மனு அளிக்கலாம். கைபேசி எண் பதிவு மற்றும் மாற்றம் செய்தல், பொது விநியோக கடைகளின் செயல்பாடுகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தரம் குறித்த புகார், தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் மற்றும் சேவை குறைபாடுகள் குறித்து புகார் மனு அளிக்கலாம்.

எனவே, பொதுமக்கள் அனைவரும் இந்த சிறப்பு முகாம்களில் கலந்து கொண்டு மேற்காணும் கோரிக்கைகள் தொடர்பான மனுவினை அளித்து தீர்வு கண்டு பயன்பெறலாம், என மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடி, தெரிவித்துள்ளார்.




மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. டங்ஸ்டன் சுரங்க திட்டம் முழுமையாக ரத்து செய்யப்பட்டதை முன்னிட்டு விவசாயிகள் கலெக்டருக்கு இனிப்பு வழங்கிய மகிழ்ச்சியை தெரிவித்தனர் பின்பு தங்களது கோரிக்கைகளை எழுத்து மூலமாகவும்கோரிக்கை மனுக்கள் வழங்கினார்.இதில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்

## திருப்பூர் மாநகராட்சியில் வரி செலுத்துவது குறித்து அறிவுறுத்தல்

திருப்பூர், ஜன.25




திருப்பூர் மாநகராட்சி 60 வார்டுகள் கொண்ட கீழ்கண்ட நான்கு மண்டலங்களாக, மண்டலம் ஒன்றுக்கு 15 வார்டுகளாக செயல்பட்டு வருகிறது. இந்நான்கு மண்டலங்களிலும் சொத்துவரி, காலியிட வரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, பாதாள சாக்கடை கட்டணம், திடக்கழிவு மேலாண்மை கட்டணம், மற்றும் குத்தகை இனங்கள் ஆகியவைக்கான வரி மற்றும் கட்டண நிலுவை செலுத்த பொதுமக்களின் வசதிக்காக வாரநாட்கள், மற்றும் அனைத்து சனி மற்றும் ஞாயிற்றுகிழமைகளிலும் காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை மைய அலுவலக கணிணி வரி வசூல் மையம், நான்கு மண்டல அலுவலகங்கள், செட்டிபாளையம், தொட்டிபாளையம், நெருப்பெரிச்சல், மண்ணரை, குமரன் வணிகவளாகம், முத்தணம்பாளையம், வீரபாண்டி, முருகம்பாளையம் மற்றும் பாண்டியன் நகர், ஆகிய கணிணி வரி வசூல் மையங்களில் பணமாகவோ அல்லது "ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி" என்ற பெயரில் காசோலை மூலமாகவோ வரி மற்றும் கட்டணங்கள் செலுத்தலாம்.

மேலும் எளிய முறையில் கீழ்கண்ட இனையதளம் வழியாக வரி மற்றும் கட்டணங்கள் செலுத்தலாம்

Use "Quick Payment" or "Register & Login" to https://tnurbanepay.tn.gov.in

இதன் மூலம் பொது மக்கள் தங்களது 202425 இரண்டாம் அரையாண்டு வரையான வரி நிலுவைகளை உடன் செலுத்தி மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் பல்வேறு வளர்ச்சி பணிகளுக்கு உதவுமாறு திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் சு.இராமமூர்த்தி தகவல் தெரிவித்துள்ளார்



திருப்பூர் மாநகராட்சி குமரன் வணிக வளாகத்தில் அனைத்துப் பிரிவு அலுவலர்களுடன் மாநகராட்சி ஆணையாளர் ராமமூர்த்தி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது. உடன் துணை ஆணையாளர் சுந்தர்ராஜன்,தலைமை பொறியாளர் செல்வநாயகம்,உதவி செயற்பொறியாளர் முனியாண்டி மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

## மதுரை உலகத் தமிழ்ச் சங்கக் கூட்ட அரங்கில் தமிழ்க்கூடல் நிகழ்வு

மதுரை, ஜன.25




மதுரை, உலகத் தமிழ்ச் சங்கமும் வக்பு வாரியக் கல்லூரியும் அம்பிகா மகளிர் கலைக் கல்லூரியும் இணைந்து 23.01.2025 (வியாழக்கிழமை) அன்று 149ஆவது தமிழ்க்கூடல் நிகழ்வினை உலகத் தமிழ்ச் சங்கக் கூட்ட அரங்கில் நடத்தின. இந்நிகழ்வில் உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் (பொ) முனைவர் ஔவை அருள் அவர்கள் தலைமை தாங்கினார்.

மதுரை, தூய மரியன்னை மேல்நிலைப் பள்ளியின் முதுகலைத் தமிழாசிரியர் முனைவர் ஞா. சந்திரன் அவர்கள் 'சிற்பியும் நாமே சிற்பமும் நாமே| என்ற தலைப்பில் தமிழ்க்கூடலுரை ஆற்றினார்.

அவர் தம் உரையில், "காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்பதைப் போல, இளமை இருக்கும் போதே நாம் விழித்துக் கொள்ள வேண்டும். நம் வாழ்வில் நம்மை ஊக்கப்படுத்தக்கூடிய வகையில் சில விசயங்களை நாம் நீக்க வேண்டும். சில விசயங்களை நாம் சேர்க்க வேண்டும். நாம் நம்மைப் புதுப்பித்துக் கொண்டே இருக்க வேண்டும். அலைபேசி கூட தன்னை அவ்வப்போது புதுப்பித்துக் கொள்கின்றது. இன்று மனிதனின் ஆறாம் விரலாய் அலைபேசி மாறியிருக்கிறது. நமக்கான உந்துசக்தி நாம் தான். நாம் நம் கவலைகளையும் கோபங்களையும் தூக்கிச் சுமந்து கொண்டு திரிவதில் பயனில்லை. நம் மனம் கடலைப் போல் விசாலமாக இருக்க வேண்டும். எதிர்மறைச் சிந்தனை உள்ளவர்களிடம் நாம் விலகியிருக்க வேண்டும். நேர்மறைச் சிந்தனையே நம்மை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும். மாணவர்கள் நிறைய வாசிக்க வேண்டும். நல்ல பேச்சாளர்களாக, சிந்தனையாளர்களாக வளர முனைவர் இறையன்பு அவர்களின் நூல்களைப் படியுங்கள். உங்கள் வாழ்விற்கு உயர்ந்த பாதையினை அவை வகுத்துக் கொடுக்கும்" என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வினை உலகத் தமிழ்ச் சங்கத்தின் ஆய்வு வளமையர் முனைவர் ஜ. ஜான்சி ராணி ஒருங்கிணைத்தார். வக்பு வாரியக் கல்லூரி மாணவர்களும் அம்பிகா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவிகளும் பேராசிரியர்களும் தமிழறிஞர்களும் தமிழார்வலர்களும் என நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.



தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தேசிய வாக்காளர் தினத்தினை (2025) முன்னிட்டு வாக்காளர் தின முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், தென்காசி வருவாய் கோட்டாட்சியர் லாவண்யா, தேர்தல் வட்டாட்சியர் ஹென்றி பீட்டர் மற்றும் அனைத்துறை துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கன்னியாகுமரியில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

கன்னியாகுமரி, ஜன.25




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தலைமையில் நடைபெற்றது.

ஜனவரி 2025 மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) அணைகளில் நீர்நிலை மற்றும் மழை விபரங்கள் குறித்து தெரிவித்தார்கள். கோடைப்பருவ சாகுபடியின் நன்மைகள் குறித்த காணொளி காட்சி ஒளிபரப்பப்பட்டது. கடந்த டிசம்பர் 2024 மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் பெறப்பட்ட 190 மனுக்களுக்கான பதில்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

விவசாயம் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் நீர்வளத் துறை மூலம் சானல்களில் தண்ணீர்வரத்து மற்றும் குளங்களை தூர்வாருதல், நீர்நிலைகளை பராமரித்தல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்ற கேள்விகளுக்கு பதில்கள் தெரிவிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. நிலவியல் வாய்க்கால் ஆக்கிரமிப்புகள் அகற்ற சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) தெரிவித்தார்கள்.

மேலும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பதத்தை 17 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வைத்த கோரிக்கைக்கு இது தொடர்பாக மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்படும் என தெரிவிக்கப்பட்டது. மேலும் குத்தகை விவசாயிகள் தங்களது நெல்லை நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் வழங்க சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களால் சான்று வழங்க வேண்டி அறிவுறுத்தப்படும் என மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்தார்கள்.விளைநிலங்களில் காட்டுப்பன்றிகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய குழு அமைக்கப்பட்டு இம்மாவட்டத்தில் காட்டுப்பன்றிகளை அழிப்பது தொடர்பாக அரசுக்கு கருத்துரு அனுப்பப்படும் என மாவட்ட வன அலுவலர் தெரிவித்தார்கள்.

நீர்ப்பாசன சங்க தலைவர் தேர்தல் விரைவில் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், சங்க தலைவர்களுக்கு அடையாள அட்டை தர வேண்டும் எனவும் வைத்த கோரிக்கைக்கு விரைவில் தேர்தல் நடத்தப்படும் எனவும் சங்க தலைவர்களுக்கு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நீர்வளத்துறை செயற்பொறியாளர் தெரிவித்தார்கள். செண்பகராமன்புதுர் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் கொட்டகை அமைக்க கோரியதற்கு மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்ட நிதியில் அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. தெங்கம்புதூர் கால்வாயில் பிப்ரவரி 28 வரை தண்ணீர் நீர்ப் பாசனத்திற்கு விநியோகம் செய்யப்படும் என நீர்வளத்துறை செயற்பொறியாளர் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம், மாவட்ட வன அலுவலர் பிரசாந்த், இ.வ.ப., நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.எஸ்.காளீஸ்வரி, நீர்வளத்துறை செயற்பொறியாளர் அருள்சன் பிரைட், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ஜென்கின் பிரபாகர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) செந்தில்வேல் முருகன், தோட்டக்கலை துணை இயக்குநர் ஷீலா ஜாண், கால்நடைப் பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் சிவகாமி, மாவட்ட சுற்றுச்சூழல் கால நிலை மாற்றத்துறை செயற்பொறியாளர் பாரதி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மதியழகன், துறை அலுவலர்கள், மாவட்டத்தின் முன்னோடி விவசாயிகள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## பொதுத்தேர்வினை தைரியமாக எதிர்கொள்ள மாணவ மாணவியர்களுக்கு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அறிவுரை

கன்னியாகுமரி, ஜன.25



கன்னியாகுமரி மாவட்டம் பார்வதிபுரம் மற்றும் ஆளூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு தொடக்க, உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் சந்தித்து அவர்களிடம் கலந்துரையாடி, தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக் குட்பட்ட பார்வதிபுரம் அரசு தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு அளிக்கப்படுகின்ற முதலமைச்சரின் காலை உணவுதிட்டத்தின்கீழ் வழங்கப்படும் உணவு எவ்வாறு வழங்கப்படுகிறது என்பதை ஆய்வு செய்ததோடு, மாணவர்களிடம் உணவின் சுவை குறித்து கேட்டறியப்பட்டது. மேலும் உணவின்தரம் குறித்து ஆசிரியர்களால் பராமரிக்கப்படும் பதிவேட்டினை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இப்பதிவேட்டில் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் சுழற்சி முறையில் தினந்தோறும், உணவின் தரம், சுவை குறித்து பதிவு செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து பார்வதிபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் சிறப்பு பயிற்சிகள் குறித் தும், மாணவர்களுக்கு அனைத்து பாடங்களும் முடிக்கப்பட்டுள்ளனவா எனவும் ஆசிரியர்களிடம் கேட்டறியப்பட்டது. மேலும் மாணவர்கள் முழு தேர்ச்சி பெறுவதற்கு இடையூறாக காணப்படும் காரணிகள் ஏதாவது உளனவா என மாணவர்களிடம் கேட்டறியப்கபட்டது. தொடர்ந்து பள்ளிக்கு ஒழுங்காக வருகை புரியாத மாணவனிடம், ஒழுங்காக பள்ளிக்கு வருகை புரிந்தால் மட்டுமே உயரிய நிலையை அடைய முடியும் என்றும், பள்ளி படிப்பினை தொடர்ந்து கவனத்துடன் கற்று முன்னேற வேண்டும். இணைய விளையாட்டுகளுக்கு அடிமையாகி கற்றலை கருத்தில் கொள்ளாமல் செயல்பட்டால் மாணவனின் வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும் என அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து ஆளூர் அரசு மேல்நிலைப் பள்ளியை பார்வையிட்டு, பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. பன்னிரண்டாம் வகுப்பு பாடம் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களிடமும் மாணவர்களின் அரையாண்டு தேர்ச்சி சதவீதம் பற்றி கேட்டறியப்பட்டதோடு, பின்னடைவு ஏற்பட்ட பாடத்தில் பாட நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர்களின் வழிமுறைகளை பின்பற்ற கேட்டுக் கொள்ளப்பட்டது. அனைத்து மாணவர்களையும் தேர்ச்சிபெற செய்வதையே இலக்காகக் கொண்டு, பொதுத்தேர்வுக்கான குறுகிய காலகட்டத்தில் மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் அளிக்க ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப.., தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் தலைமையாசிரியர்கள் மேரி ஹெலன் பிரேமா (பார்வதிபுரம்), ஜெயமேரி (ஆளூர்), ஆசிரியர்கள் மாணவ மாணவியர்கள், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## மதுரை மாநகராட்சி "ரூ.1.46 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய தார் சாலை"யை பயன்பாட்டிற்கு திறந்து வைத்த மேயர்

மதுரை, ஜன.25



மதுரை மாநகராட்சி மண்டலம் 2 செல்லூர் பகுதியில் (60 அடி சாலை) புதிதாக அமைக்கப்பட்டுள்ள தார் சாலையினை மேயர் இந்திராணி பொன்வசந்த் அவர்கள், ஆணையாளர் ச.தினேஷ் குமார், இ.ஆ,ப.. அவர்கள், வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி ஆகியோர் பயன்பாட்டிற்கு இன்று (24.01.2025) திறந்து வைத்தார்கள்.

மதுரை மாநகராட்சியில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளான புதிய சாலைகள், மழைநீர் வடிகால்கள், பள்ளி கூடுதல் வகுப்பறைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு கூடங்கள், நலவாழ்வு மையங்கள், நகர்ப்புற சுகாதார மையங்களில் கூடுதல் கட்டிடங்கள், சமுதாய கூடங்கள், உள்ளிட்ட பல்வேறு பணிகள் சிறப்பாக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.23 மற்றும் 27 க்கு உட்பட்ட 60 அடி ரோடு பிரதான சாலையானது செல்லூர் குலமங்கலம் ரோடு மற்றும் நரிமேடு மெயின் ரோடுகளை இணைக்கும் பிரதான சாலை ஆகும். 15 CFC & NSMT திட்டத்தின் கீழ் ரூ.1.46 கோடி மதிப்பீட்டில் 897.30 மீட்டர் நீளம், 10 மீட்டர் அகலத்தில் புதிய தார்ச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. புதிதாக அமைக்கப்பட்டுள்ள தார் சாலையினை மேயர், ஆணையாளர், வடக்கு சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வில் மண்டலத் தலைவர் சரவணபுவனேஸ்வரி, உதவி ஆணையாளர் கோபு, செயற்பொறியாளர் சேகர், உதவி செயற் பொறியாளர் காமராஜ், இளநிலை பொறியாளர் பாண்டிக்குமார், மாமன்ற உறுப்பினர்கள் குமரவேல், மாயத்தேவன் உட்பட மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS" No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161